02.06.2023

O.S No. 172/2017

**D.W.2 – சரவணன்**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

பிரதிவாதி என்னுடைய உறவினர் அல்ல. ஒரே தெருவில் வசிப்பவர்கள். எனக்கு பாடம் சொல்லித்தந்த ஆசிரியர் ஆவார் . பிரதிவாதிகளின் குடும்ப உறுப்பினர்களை எனக்கு தெரியும். ஒரு உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் . சாட்சியாக கையெழுத்து போடுவதற்கு பிரதிவாதி சந்திரசேகர் அழைத்தாரா என்றால் பிரதிவாதி சந்திரசேகரின் தாயார்தான் என்னை அழைத்தார். சாட்சியாக கையெழுத்து போடுவதற்கு எனது தாயாரும் முனியம்மாள் என்பவரும் தயாராக இருந்தார்கள் . ஆனால் அவர்கள் பெண்கள் என்பதால் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். சாட்சியாக கையெழுத்து போட என்னை யாரும் அழைத்துவரவில்லை. எதேர்ச்சையாக நான் அம்மாவுடன் சென்றபோது சாட்சியாக கையெழுத்து போட்டேன் . மற்றொரு சாட்சி பிச்சை முகமதை யார் அழைத்தார்கள் என்பது தெரியாது என்று சாட்சி கூறுகிறார். நான் சென்றபோது அங்கு அவர் இருந்தார். நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்தால் தண்டணை உண்டு என்ற விவரம் தெரியும். சுலோச்சனா என்பவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன்தான் இருந்தார் . பிரதிவாதி பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வரவில்லை . சுலோச்சனாவை அவருடைய கணவர்தான் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு அழைத்துவந்தார் . அவர் பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து போடவில்லை . அந்த ஆவணத்தில் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்பது தெரியாது . எ.ம.சா.ஆ.3 மற்றும் எ .ம.சா.ஆ.4 ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்றாலும் , சுலோச்சனா என்பவரை ஆள்மாறாட்டம் செய்து மேற்படி ஆவணத்தில் போலியாக கையெழுத்து பெற்று மேற்படி ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதி சந்திரசேகர் என்னுடைய ஆசிரியர் என்றவகையிலும் , குருநாதர் என்றமுறையிலும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுலோச்சனா உயிருடன் இருக்கும் காலத்தில்

எப்போதும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்று அவருடைய சொத்தைப்பொருத்து எந்த பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதுபோன்று சாட்சி பிச்சை முகமது பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வந்து சாட்சியாக கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பம் மட்டும் நான் போட்டேன் . அதில் உள்ள விலாசம் மற்ற விவரங்களை பத்திர எழுத்தர்தான் எழுதினார். நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd./- K. Babu, 02.06.2023,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.